**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**SUB JUDGE**

**S.C. No.382 / 2023**

Deposition of witness for PW1

Name : **அன்னலெட்சுமி**

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2026

---

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

LW1 திருமதி.அன்னலெட்சுமி சாட்சி அழைப்பானை பெயரில் ஆஜர் அ.சா.1 ஆக விசாரணை.

**முதல் விசாரணை:–**

நான் மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா S.பெருமாள்கோவில்பட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நானும் எனது கணவர் சிவபாண்டியும், திருமங்கலம் To செக்கானூரணி ரோட்டில் கின்னிமங்கலம் பவர் கிரிட் அருகில் தள்ளுவண்டியில் பாஸ்ட் புட் கடை வைத்து நடத்தி வருகிறோம். எங்களுக்கு சிவனேசன் என்ற மகனும், சிவகாமி என்ற மகளும் இருக்கிறார்கள். இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது கணவர் அவரது தாய்மாமன் மகளான சிவபிரமே என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு கள்ளதொடர்பில் இருந்து வந்தார்கள். சிவபிரேமா திருமணம் ஆகி அவரது கணவருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து இருந்தார். அவர் கள்ளதொடர்பில் இருந்ததால் 17.06.2021ம் தேதி காலை 8.00 மணியளவில் நானும் எனது கணவர் சிவபாண்டியும் எங்களது பாஸ் புட் கடையில் இருந்தபோது 3

பையன்கள் அங்கு வந்து என் கணவரை கத்தி, சூரிகத்தி, வெட்டுஅருவாள் ஆகிய ஆயுதங்களால் வெட்டினார்கள். அப்போது என் கணவருக்கு தலை நெத்தியிலும், பின்தலையிலும், இடது தோள்பட்டையிலும், நெஞ்சிலும் காயம் ஏற்பட்டது. இடது கைகளில் 3 விரல் துண்டாகிவிட்டது. இரண்டு கைகளிலும் முட்டிக்கு கீழ் பக்கத்தில் இரத்தக்காயம் ஏற்பட்டது. இரண்டு கால்களிலும் இரத்தகாயம் ஏற்பட்டது. அவ்வாறு 3 பையன்களும் என் கணவரை வெட்டும்போது என்னடா தேவிடியா மகனே இந்த மாதிரி கள்ளதொடர்பு வைத்திருக்க நீ உயிரோடு இருக்க கூடாது வெட்டுடா, வெட்டுடா என்று சொல்லிக்கொண்டு வெட்டினார்கள். அப்போது என் கணவர் அவர்கள் வெட்டுவதை கைகளால் தடுத்துக்கொண்டே விலகி விலகி சென்றார். ஆனாலும் தொடர்ந்து வெட்டினார்கள். அப்போது என் கணவர் நீங்கள் யாருடா, யாருடா என்று கதறி கதறிக்கேட்டார். அதில் ஒருவன் போட்டுதள்ளுடா இவனை, போட்டு தள்ளுடா இவனை என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டே வெட்டினார். என் கணவரை வெட்டிய அந்த 3 பையன்களை அந்த 3 பையன்கள் என்பது விக்னேஷ், கார்த்திக் மற்றும் அருண்ராஜா அதில் விக்னேஷ் மற்றும் கார்த்திக் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள். சம்பவம் நடந்தபோது அருகில் இருந்த கோழிக்கடை வைத்திருக்கும் அலெக்ஸ்சாண்டர் மற்றும் சிலர் சத்தம் போட்ட உடன் 3 பையன்களும் ஓடிவிட்டார்கள். அங்கிருந்த 108 ஆம்புலன் மூலம் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன் மூலம் மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். சிகிச்சையில் இருந்தபோது உள்நோயாளளியாக என் கணவர் அவசரசிகிச்சையில் இருந்தபோது செக்கானூரணி காவல்நிலைய ஆய்வாளர் விசாரணை செய்தார்கள். என்

கணவர் மயக்கநிலையில் இருந்ததால் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் என்னுடன் எனது மருமகன் மணிகண்டன் சாட்சி கையொப்பம் இட்டார். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அதில் உள்ள பக்கம் 2ல் வலது கீழ்புறம் உள்ள அன்னலெட்சுமி என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1.** எனக்கு எழுதபடிக்க தெரியாது. கையொப்பம் மட்டும் செய்தேன். புகார் வாக்குமூலத்தை படித்து காட்டியபிறகு தான் நான் கையொப்பம் செய்தேன். வழக்கு சம்மந்மாக போலீஸ் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இல்லை

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

RENGANATHAN BARATHIRAJA

Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.07 11:52:50 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.